# இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பூமி

எம்.எம். பாஸில்
(விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)

கிறிஸ்துக்கு முற்பட்டகாலங்களில் பலஸ்தீன் பிரதேசத்தில் பனூ இஸ்ராயீல்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. உரோமசாம்ராச்சியம் அப்பிரதேசங்களை ஆட்சி செய்த போது, கி.பி. 70ம் ஆண்டுகாலப்பகுதியில் பனூ இஸ்ராயீல்களை அங்கிருந்து வெளியேற்றியதாக வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது. பனூ இஸ்ராயில்கள் அவர்களது நடத்தைகள் காரணமாக நாடற்றவர்களாக இறைவனால் சபிக்கப்பட்ட ஒரு சமுதாயமாக உலக நாடுகளில் பரவி வாழ்ந்தார்கள். குறிப்பாக ஐரோப்பிய நாடுகளிலும், ரஷ்யாவிலும் அவர்கள் வாழ்ந்தார்கள். கடும் உழைப்பாளிகளாகவும், மூளைசாலிகளாகவும் விளங்கிய அவர்கள், உலகப் பொருளாதாரத்தில் தனிச் செல்வாக்கைச் செலுத்தி வந்தனர். சிறுபான்மையாக இஸ்ரேலியர்கள் இருந்தபோதும், அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் வட்டித்தொழில் பிரபல்யமடைந்தது. பொருளாதார வளம் படைத்த அவர்கள், ஏனையோரை அடிமைகளாகக் கணித்து தமது ஆதிக்கத்தை வளர்த்தமையால், அவர்கள் எப்பொழுதும் எல்லா இடங்களிலும் பிரச்சினைக்குரியவர்களாகக் கணிக்கப்பட்டனர். தற்காலத்தில் கூட அவர்கள் சனத்தொகையில் இரண்டு வீதமாக இருந்தபோதிலும் அரசியல், பொருளாதார, விஞ்ஞான அமைப்புகளிலும் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்திவிடுகின்றனர்.

கிப்று மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இஸ்ரேலியர்கள், தாங்கள் வாழுகின்ற நாடுகிளில் பேசப்படும் மொழிகளுடன் மிகவும் பரிச்சயமானவர்கள். தாங்கள் வாழ்ந்த நாடுகளில் வட்டித் தொழிலில் ஈடுபட்டு நிலங்களைத் தங்களது உடைமைகளாக மாற்றுவதில் மிகவும் நுணுக்கமான திட்டங்களைக் கடைப்பிடித்து வந்தனர். அது சாத்தியப் படாதபோது பலாத்காரத்தைப் பாவித்து தங்களது திட்டங்களை சாதித்துக்

கொள்வதிலும் வல்லவர்களாக இருந்தனர். ஐரோப்பிய நாடுகளில் யூத இஸ்ரேலியர்களுக்கு எதிரான வன்முறைகள் உருவான போது, 1920களில் ஏற்கனவே திட்டமிட்டவாறு பலஸ்தீனில் வந்து குடியேற அரும்பித்தனர்.

1930 களுக்குப் பினன்ன், அதிகளவில் ஸியோனிச யூதர்கள் (இஸ்ரேலியர்கள்) பலஸ்தீனில் வந்து காணிகளை விலைக்கு வாங்கியும், பலாத்காரத்தின் மூலம் காணிகளைப் பெற்றும் குடியேற ஆரம்பித்தனர். உதுமானிய ஆட்சியிலிருந்து பலஸ்தீனத்தைக் கைப்பற்றிய பிரித்தானிய ஏகாதிபத்தியம், யூதர்களுக்கு ஆதரவாக பலஸ்தீனத்தில் ஸியோனிஸ யூதர்களுக்கு ஆட்சி யொன்றை உருவாக்க வழி அமைத்தது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய ஸியோனிச யூதர்கள், அரபுகளுடன் சண்டையில் ஈடுபட்டு பிரித்தானியாவின் துணையுடன் அதிக நிலங்களை தம்வசமாக்கிக் கொண்டனர்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஸேற்றுவிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மேற்கத்திய ஆதிக்கத்தின் கீழ் இருந்தமையால், பலஸ்தீனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 1947ம் ஆண்டு நவம்பரில், பலஸ்தீனம் தொடர்பான மத்திய கிழக்குச் சபை ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் தீர்மானத்துக்கமைய 1947ம் ஆண்டு நவம்பர் 29ம் திகதி இப்பிராந்தியத்தில் இரண்டு நாடுகள் அமைக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் முன்வைக்கப்பட்டது. இஸ்ரேல், பலஸ்தீன் என்ற இரு நாட்டுத்தீர்மானம் (242ம்) நிறைவேற்றப்பட்டதால், சனத்தொகையில் 1/3 பகுதியினரான யூதர்களுக்கு இஸ்ரேல் என்னும் ராச்சியமும், 2/3 பகுதியினரான பலஸ்தீனியர்களுக்கு பலஸ்தீன் ராச்சியமும், உருவாக்கப்பப வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனை அமெரிக்காவும், ரஷ்யாவும் உடனடியாக அங்கீகரித்தன. இஸ்ரேலின் முதலாவது ஜனாதிபதியாக டாக்டர் வெஸ்மன் (Dr. Weisman) பதவியேற்றார். இஸ்ரேலிய ஆட்சி நிறுவப்பட்டதும், இஸ்ரேலிய யூதர்களால் பலாத்காரம் பிரயோகிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டது.

பலஸ்தீனர்கள் தங்களது பிரதேசங்கைளப் பாதுகாத்துக் கொள்வதற்காக கெரில்லாத் தாக்குதல்களை ஆரம்பித்தார்கள். அரபு நாடுகளின் தலைவர்களும் பலஸ்தீனுக்கு ஆதரவு வழங்க ஆரம்பித்தனர். பலஸ்தீனர்கள் முகாம்களை அமைத்து ஸியோனிச யூதர்களுக்கு எதிராக போராட்டங்களில் இறங்கினர். 1940ம் ஆண்டிலிருந்து இப் போராட்டக் குழுவினர் பல்வேறு வடிவங்களில் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

அவற்றில் முக்கியமானவை வருமாறு.

*. Palestine Regional Organization
*. The Action Organization Liberation of Palestine
*. The Popular democretic Front for the Liberation at Palestine
*. The Saigee group
*. Al Fathah (Yaseer Arafath's group

1967ம் ஆண்டில் எல்லா இயக்கங்களும் ஒன்றிணைக்கப்பட்டு PLO என்னும் பலஸ்தீன வீடுதலை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வியக்கத்துக்கு ரஷ்யாவின் ஆதரவு இருப்பதாகக் காட்டிக் கொள்ளப்பட்டாலும், மறு புறத்தில் முஸ்லிம்களுக்கெதிரான செயற்பாடுகளில் ரஷ்யாவும் அமெரிக்காவும் ஒன்றுபட்டுச் செயற்படத் தொடங்கின.

மத்திய கிழக்கில் ஏற்பட்ட யுத்தங்களில் இஸ்ரேல் வெற்றிபெறுவதற்கு அமெரிக்காவும் ஐரோபிய நாடுகளும் அதற்கு உதவியளித்தமையே முக்கிய காரணியாகும். அமெரிக்க விஞ்ஞானிகளில் அதிகமானோர் யூதர்களாவர். ஏற்கனவே குறிப்பிட்டது போல் அமெரிக்காவின் அரசியல், பொருளாதார ஆயுத உற்பத்திகளுக்கு யூத விஞ்ஞானிகளே, முக்கிய பங்களிப்புச் செய்து வந்துள்ளனர். ஆகவே தான் அமெரிக்கா இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகின்றது. அறபு நாடுகின் எண்ணெய் வளத்தில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துவதுபோல் அந்நாடுகளின் அரசியல் பொருளாதார அமைப்புகளிலும் தனது செல்வாக்கினைச் செலுத்திவருகின்றது. இதனால் அமெரிக்காவுக்கு எதிராக எண்ணெய் வளமிக்க அறபு நாடுகள் யெற்பட முடியாமல் காணப்படுகிறது.

முஸ்லிம்நாடுகளைப் பிரித்தாளும் செல்வாக்கைக் கொண்டுள்ள அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளையும் தன்னுடன் இணைத்துச் செயற்படுவதால் அது இஸ்ரேலுக்கு தொடர்ந்தும் பலத்தை அளிப்பதாகக் காணப்படுகிறது. இஸ்ரேல் அமெரிக்காவால் தோற்றுவிக்கப்பட்ட ஒருநாடு என்ற உளவியல் ரீதியான உணர்வையும் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் நலன்களுக்கு துணையாக இஸ்ரேல் அமைய வேண்டும் என்னும் நோக்கையும் கொண்டே அமெரிக்கா செயற்படுகின்றது. இதற்காக நிரந்தர நாடாக இஸ்ரேலை மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலைப்படுத்த தன்னாலான முழுமையான ஒத்துழைப்பினை அமெரிக்கா தொடர்ந்தும் பகிரங்கமாக வழங்கி வருகின்றமையால், யஸீர் அரபாத் இஸ்ரேலை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளானார். இதனை இஸ்ரேல் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. தொடர்ந்தும் பலஸ்தீனுக்கு எதிரான கொள்கையை கடைப்பிடித்து வரும் இஸ்ரேல் ஆட்சியினர், 1991ல் இடம்பெற்ற Medrit Conference லும் இதனை உறுதியாக்கிக் கொண்டனர்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப்பின்னர் பலஸ்தீனியர்களுக்கு ஆயுதம் பெறும் வாய்ப்பு குறைவடைந்ததுடன் நிதிப்பற்றாக்குறையும் ஏற்பட்டது. இதனால் பலஸ்தீன இளைஞர்களின் போராட்டம் உருவானது. இதனால் அறபாத்தின் செல்வாக்குப் படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. இளைஞர்களின் போராட்டம் முன்னுரிமை பெற்றது. இதனை மழுங்கடிப்பதற்கு 1991ல் நோர்வேயில் OSLO பேச்சு வார்த்தைகள் இஸ்ரேலிய அரசாங்கத்துக்கும் யஸீர் அரபாத் குழுவினருக்குமிடையே ஆரம்பமாகின. 1992ல் இஸ்ரேல் தலைவர் ஸாமிர் தோற்றபின்னர், ராபின் வெற்றி பெற்றபோது Peace Talking to Peace making என்னும் கோட்பாட்டைக் கொண்டிருந்தார்.

பலஸ்தீனியர்களின் போராட்டத்துக்கு முகம் கொடுக்க முடியாத நிலை உருவானபோது, பல விட்டுக்கொடுப்புகளுக்கு பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட ஸிமோன் பெரஸ் முன்வரவேண்டி ஏற்பட்டது. 1993ல் பலஸ்தீனமும் இருக்கலாம் என்ற ஒரு நிலைப்பாட்டுக்கு இஸ்ரேலியர் வந்தனர். மட்டுப்படுத்தப்பட்ட

சுயாட்சியை ஜெரிக்கோவிலும், காஸாவிலும் பலஸ்தீனியர்கள் மேற் கொள்ளலாம் என்ற நிலைப்பாடு ஏற்பட ஆரம்பித்தது. இதன் பின்னர் 1996ம் ஆண்டில் அப்போதய இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக் ராபின், அமீர் என்ற யூத இளைஞனால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இஸ்ரேலிய ஆட்சியாளர்கள் மத்தியிலும் தீவிரப்போக்கு உருவாக ஆரம்பித்தது. அது அரச பயங்கராவதமாக மாறி பலஸ்தீனியர்களின் பரதேசங்களை இஸ்ரேலியப்படைகள் கைப்பற்ற ஆரம்பித்தனர். ஜெனின், காஸா, ரமல்லா, மேற்குக்கரை போன்ற பலஸ்தீன முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். அதற்கெதிராக கமாஸ் இயக்கமும்; ''ஜிஹாத்'' அமைப்பும் போராட்டங்களில் இறங்கியுள்ளன. இதனால் ஸியோனிஸ யூதர்கள் படிப்படியாக பலஸ்தீனை விட்டு வெளியேறி ஐரோப்பிய நாடுகளில் மீண்டும் குடியேற முயன்று வருகின்றனர். பலஸ்தீனப் போராட்ட வரலாற்றில் இது ஒரு முக்கிய திருப்பு முனையாக கொள்ளப்படுகிறது.